RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025







# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்







சிவகங்கை | மலர்-5 | இதழ்- 211 | ஆகஸ்டு.6 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5


# தவெக கூட்டணி அரசின் முதல் பட்ஜெட் : 2036க்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கு

## மகளிர், மாணவர் மற்றும் இளைஞர் நலனுக்காக 8 புதிய மெகா திட்டங்கள்!

சென்னை: ஆக.6-

"2036 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதே இலக்கு" என்ற பிரகடனத்துடன், டெண்டர் முறைகேடுகளை ஒழிக்கும் அதிரடி சீர்திருத்தங்கள், மாணவர்கள், பெண்கள், இளைஞர்களுக்கான புதிய திட்டங்களுடன் கூடிய தவெக கூட்டணி அரசின் முதல் பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் தலைமையில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தவெக அரசின் முதல் பட்ஜெட் என்பதால் பெரும் எதிர்பார்ப்பு நிலவி வந்தது. இந்த நிலையில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2026-2027 ஆம் நிதியாண்டுக்கான முதலாவது முழுமையான திருத்தப்பட்ட பொது பட்ஜெட்டை நிதி அமைச்சர் மரிய வில்சன் இன்று காலை 10 மணிக்குத் தாக்கல் செய்தார்.

மாநிலத்தின் ரூ.13.18 லட்சம் கோடி ஒட்டுமொத்தக் கடன் சுமைக்கு மத்தியிலும், விளிம்புநிலை மக்கள், பெண்கள் மற்றும் மாணவர்களை குறிவைத்து பல புதிய திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்ணன் சீர் திட்டம்

தவெகவின் முதன்மையான தேர்தல் வாக்குறுதியான இந்த திட்டத்தின் கீழ், ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களை சேர்ந்த பெண்களுக்கு திருமண உதவியாக 8 கிராம் தங்க நாணயம் மற்றும் ஒரு பட்டுப்புடவை வழங்கப்படும். இதற்கென முதற்கட்டமாக இந்த பட்ஜெட்டில் ரூ. 812 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய் மாமன் தங்க மோதிரத் திட்டம்

அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் முதலமைச்சரின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் பரிசாக வழங்கப்படும் திட்டம் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளான செப்டம்பர் 15, 2026 முதல் அமலுக்கு வருகிறது. இதற்காக இந்த பட்ஜெட்டில் ரூ. 560 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மண்ணின் மகள் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விளிம்புநிலை பெண் விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக மாற்றுவதே இதன் நோக்கம். பெண்கள் சொந்தமாக விவசாய நிலம் வாங்க நிதியுதவி அளிக்கப்படுவதோடு, முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவுச் கட்டணத்திலிருந்து பெண்களுக்கு 100% முழு விலக்கு அளிக்கப்படும். இத்திட்டத்திற்கு பட்ஜெட்டில் ரூ. 300 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'தாய் கேர்' இல்லங்கள்

கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதி கர்ப்பிணிகள் பிரசவத்திற்கு முன்பே தங்கி மருத்துவக் கண்காணிப்பு மற்றும் ஊட்டச்சத்துப் பெற ரூ. 23 கோடி செலவில் இந்த ஆதரவு மையங்கள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நடமாடும் முதியோர் சிகிச்சை மையங்கள்

மூத்த குடிமக்களின் மருத்துவ வசதிக்காக தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 1,000 நடமாடும் சிகிச்சை மையங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதில் ஒரு மருத்துவர், செவிலியர் மற்றும் பிசியோதெரபிஸ்ட் அடங்கிய குழுவினர் கிராமப் பஞ்சாயத்துகளுக்கே நேரடியாகச் சென்று இலவசப் பரிசோதனை மற்றும் மருந்துகளை வழங்குவர். இதற்கென இந்த பட்ஜெட்டில் ரூ.33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

கல்வி மற்றும் மாணவர் நலம்

மாநிலத்தின் கல்வித் தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்காக பட்ஜெட்டில் மிகக் கணிசமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

கல்வித்துறைக்கு ஒதுக்கீடு: பள்ளி கல்வித்துறைக்கு மட்டும் இந்த பட்ஜெட்டில் ரூ.44,567 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டினன்சுடர் திட்டம்: மாநிலம் முழுவதும் உள்ள அரசு மற்றும் கல்லூரி மாணவர் விடுதிகளை நவீனப்படுத்த ரூ.3,200 கோடி மதிப்பீட்டில், 1 லட்சம் நவீன தங்குமிட வசதிகளுடன் கூடிய 200 ஒருங்கிணைந்த விடுதிகள் கட்டப்படும். இத்திட்டத்தை விரைவுபடுத்த 'தமிழ்நாடு மாணவர் விடுதிகள் மற்றும் உள்கட்டமைப்பு கழகம்' என்ற தனி அமைப்பு ரூ. 10 கோடி தொடக்க மூலதனத்துடன் நிறுவப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.



'சூப்பர் கிளீன், சூப்பர் கேம்பஸ்' திட்டம்: முதற்கட்டமாக மாநிலம் முழுவதும் உள்ள 10,000 அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு, வளாகத் தூய்மை, கழிப்பறை வசதிகள் மற்றும் 24 மணி நேரப் பாதுகாப்பை மேம்படுத்த ரூ.139 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்ணல் அம்பேத்கர் வெளிநாட்டு உயர்கல்வி உதவித்தொகை: புகழ்பெற்ற சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு மாணவர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.36 லட்சம் வரை நிதியுதவி வழங்கப்படும். நடப்பாண்டில் 362 மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்கு ரூ.131 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை உணவுத் திட்டம்: அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் வழங்கப்பட்டு வரும் காலை உணவுத் திட்டத்தை 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை விரிவாக்கம் செய்ய ரூ.710 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி லேப்டாப் திட்டம்: கல்லூரி மாணவர்களின் டிஜிட்டல் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யப் புதிய மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.2000 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் நலன், வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை

வெற்றி திறன் பயிற்சித் திட்டம்: தமிழகத்தை சேர்ந்த 13 லட்சம் இளைஞர்களுக்கு தொழிற்துறை சார்ந்த நவீன வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்த இத்திட்டம் தொடங்கப்படுகிறது.

ஊதியத்துடன் இன்டர்ன்ஷிப்: இதன் முதற்கட்டமாக, முன்னணி தனியார் மற்றும் அரசு நிறுவனங்களுடன் இணைந்து 20,000 இளைஞர்களுக்கு மாத ஊதியத்துடனான செயல்முறைப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

விளையாட்டுத் துறைக்கு 'மெகா' ஒதுக்கீடு: விளையாட்டு மற்றும் இளைஞர் நல மேம்பாட்டுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 572 கோடியிலிருந்து ரூ. 1,051 கோடியாக இரண்டு மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதில் 10 சிறப்பு ஒலிம்பிக் பயிற்சி மையங்களை அமைக்க ரூ. 50 கோடியும், 8 முதல் 12 வயதுடைய குழந்தைகளுக்கான விளையாட்டுத் திறனாய்வுத் திட்டத்திற்கு ரூ. 5 கோடியும் அடங்கும்.

உள்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சிறுபான்மையினர் நலன்

அடுத்த 5 ஆண்டுகளில் மாநிலம் முழுவதும் 20,000 பொது மின்சார வாகன சார்ஜிங் நிலையங்களை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் ரூ. 50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், குடியிருப்புப் பகுதிகளில் சார்ஜிங் மையங்களை அமைக்க ரூ.5 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட 8 கடலோர மாவட்டங்களில் 2,500 ஹெக்டேர் பரப்பளவில் புதிய சதுப்புநில அலையாத்திக் காடுகள் வளர்க்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பனை தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், பதநீர், பனங்கற்கண்டு போன்ற மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிக்கவும் ரூ. 16 கோடி செலவில் பனை மேம்பாட்டு கழகம் மீண்டும் புத்துயிர் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த நிலையான ஆடைகளை உற்பத்தி செய்வதற்கான உள்கட்டமைப்பை மேம்படுத்த 'திருப்பூரில் டெக்ஸ்டைல் டெக்னாலஜி மையம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதன்முறையாக ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்ளும் இஸ்லாமியப் பயணிகளுக்கான மானியம் ரூ. 35,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் கல்வி மற்றும் நலனுக்காக ஒட்டுமொத்தமாக ரூ.1,700 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூகச் சவால்களைச் சந்திக்கும் மூன்றாம் பாலினத்தவர்களாக 5 மாவட்டங்களில் பாதுகாப்பான தங்குமிடம், உணவு மற்றும் மறுவாழ்வு அளிக்கும் 'அரண்' காப்பகங்களும், தற்காலிகப் பயணங்களின் போது தங்குவதற்கு 15 மாவட்டங்களில் குறுகிய காலத் தங்குமிடங்களும் அமைக்கப்படும்.

நிதி மேலாண்மை, டெண்டர் சீர்திருத்தங்கள் மற்றும் கடன் சுமை

பட்ஜெட் உரையில் நிதி அமைச்சர் மரிய வில்சன், கடந்த கால நிதி முறைகேடுகளை சுட்டிக்காட்டி பல்வேறு சீர்திருத்தங்களை அறிவித்தார்.

அரசு பொதுத்துறை நிறுவனங்களின் கடன்களையும் சேர்த்து தமிழ்நாட்டின் உண்மையான ஒட்டு மொத்தக் கடன் சுமை ரூ.13.18 லட்சம் கோடியாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் மாநிலத்தின் மொத்த வருவாய் ரூ.3,44,575 கோடியாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 74.67% ஆகவும், மீதமுள்ள 25.33% மத்திய வரிகளின் பங்கு மற்றும் மானியங்கள் மூலம் பெறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொத்த செலவினம் ரூ.4,67,264 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் குறிப்பிட்ட சிலர் மட்டுமே பங்கேற்கும் வகையில் இருந்த "போட்டியற்ற டெண்டர்" முறைகள் ஒழிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர்களுக்கான தேவையற்ற சான்றிதழ் விதிமுறைகள் நீக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் டெண்டர் முறைகேடுகள் தடுக்கப்பட்டு அரசுக்கு ரூ.15,000 கோடி கூடுதல் வருவாய் ஈட்ட இலக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும் நிதியமைச்சர் மரியவில்சன் தெரிவித்தார்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கட்டிட அனுமதி வழங்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, அனுமதி வழங்கும் செயல்முறைகளில் இருந்த ஊழல் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்பட்டு இடம்பெறாத முக்கிய அறிவிப்புகள்

மாநிலத்தின் ரூ.13.18 லட்சம் கோடி கடன் சுமையைக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளதால், சில மெகா தேர்தல் வாக்குறுதிகள் இந்த முதலாமாண்டு பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2,500 வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டம், ஆண்டுக்கு 6 இலவச சிலிண்டர்கள், வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கும் திட்டம் மற்றும் அனைத்து அரசுப் பேருந்துகளிலும் மகளிருக்கு இலவச பயணம் என்ற அறிவிப்பும் இந்த பட்ஜெட்டில் இடம் பெறவில்லை.

2.30 நிமிடங்கள் பட்ஜெட் உரை

தவெக அரசின் முதல் நிதிநிலை அறிக்கையை, காலை 10.01க்கு வாசிக்க தொடங்கிய நிதியமைச்சர் மரியவில்சன், சரியாக 12.31க்கு தனது உரையை நிறைவு செய்தார். மொத்தம் 2 மணி நேரம் 30 நிமிடம் பட்ஜெட் உரையை முழுமையாக அவர் வாசித்தார். இதனையடுத்து சட்டப் பேரவை ஒத்தி வைக்கப்படுவதாக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்தார்.

தொடர்ந்து தமிழ்நாட்டின் வேளாண் மற்றும் உழவர் நலத் துறைக்கான பட்ஜெட்டை நாளை (ஆகஸ்ட் 6, 2026) காலை 10 மணிக்கு வேளாண் துறை அமைச்சர் ஆர். வினோத் சட்டப்பேரவையில் தாக்கல் செய்ய உள்ளார்.

# அயோத்தி ராமர் கோயிலின் தங்கம், வெள்ளி குறித்து ஆய்வு



அயோத்தி, ஆக.06-

அயோத்தி ராமர் கோயிலுக்கு பக்தர்கள் அளிக்கும் நன்கொடை, காணிக்கை பணம் திருடப்படுவதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக விசாரிக்க உத்தர பிரதேச அரசு சார்பில் சிறப்பு புலனாய்வு குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டு உள்ளது. மூத்த ஐஏஎஸ் அதிகாரி விஜய் விஷ்வாஸ், மூத்த ஐபிஎஸ் அதிகாரி கிரண், நிதித்துறை சிறப்பு செயலாளர் நீல் ரத்தன் ஆகியோர் அடங்கிய எஸ்ஐடி குழுவினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளையின் பொதுச்செயலாளர் சம்பத் ராய், அறங்காவலர் அனில் மிஸ்ரா ஆகியோர் அண்மையில் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர். புதிய பொதுச்செயலாளராக கிருஷ்ண மோகன் நியமிக்கப்பட்டு உள்ளார்.

இந்த சூழலில் எஸ்ஐடி குழுவை சேர்ந்த மூத்த ஐபிஎஸ் அதிகாரி கிரண் மற்றும் அயோத்தி பகுதி டிஐஜி சோமன் வர்மா, மூத்த போலீஸ் அதிகாரி கவுரவ் குரோவர் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் அயோத்தி எஸ்பிஐ வங்கியில் உள்ள ராமர் கோயிலின் லாக்கர்களில் நேற்று சோதனை நடத்தினர். ராமர் கோயிலுக்கு காணிக்கையாக வழங்கப்பட்ட தங்கம், வெள்ளி நகைகள், பொருட்கள் இந்த லாக்கர்களில் வைக்கப்பட்டு உள்ளன.

கோயில் பதிவேடுகளின் கணக்குகளை ஒப்பிட்டு வங்கி லாக்கர்களில் சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனையின்போது ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை பொதுச்செயலாளர் கிருஷ்ண மோகன் உடன் இருந்தார்.

# த.வெ.க., அரசின் பட்ஜெட் மிகப்பெரிய பூஜ்ஜியம்; தி.மு.க.,வின் திட்டங்களில் “வெற்றி” என ஸ்டிக்கர்: உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்




சென்னை, ஆக.06-

பள்ளிக்கல்வி, உயர்கல்வித்துறைக்கான நிதி குறைப்புக்கு உதயநிதி கண்டனம் தெரிவித்துள்ளார். 2026-2027ஆம் ஆண்டுக்கான தமிழகத்தின் திருத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் மரிய வில்சன் இன்று தாக்கல் செய்தார். இது குறித்து கருத்து தெரிவித்துள்ள எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின்; 100 நாட்களில் தவெக அரசுக்கு பூஜ்ஜியம்தான் மதிப்பெண்ணாக வழங்க முடியும். பட்ஜெட்டுக்கும் பூஜ்ஜியம் மதிப்பெண்தான். வாக்குறுதிகள் எப்போது நிறைவேற்றப்படும்? என்ற கேள்விக்கும் தவெக அரசிடம் பதில் இல்லை.

மாற்றம், மாற்றம் என்று சொன்னவர்களின் ஆட்சியில் பெயர் மாற்றம் மட்டுமே நடந்துள்ளது. திமுக அரசின் திட்டங்களுக்கு தவெக ஸ்டிக்கர் ஒட்டி அறிவித்துள்ளது. " `அன்பு சோலை' என நாங்கள் கொண்டு வந்த திட்டத்துக்கு `முதியோர் பொழுதுபோக்கு மையங்கள்' என்றும் `உலகம் உங்கள் கையில்' என்ற லேப்டாப் திட்டத்துக்கு `வெற்றி மடிக்கணினி திட்டம்' என்றும் `கலைஞர் கனவு இல்லம்' திட்டத்துக்கு `வெற்றி வீடு திட்டம்' என்றும் `முதல்வர் படிப்பகங்கள்' திட்டத்துக்கு `டிஜிட்டல் நூலகம்' என்றும் `நன்னிலம்' திட்டத்துக்கு `மண்ணின் மகள் திட்டம்’ என்றும் பெயரை மாற்றியிருக்கிறார்கள்

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்து செயல்படுத்திய திட்டங்களையே பெயர் மாற்றி அறிவித்துள்ளார்கள். திமுக ஆட்சியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்தது. மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவெக அரசுக்கு தைரியம் இல்லை. சட்டமன்றத்தில் பட்ஜெட் குறித்து கேள்வி கேட்பதை தடுக்கவே என்னை கைது செய்து அலைக்கழிப்பு செய்தனர். தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. கடந்த 5 வாரங்களில் 4 காவல் மரணங்கள் நடந்துள்ளன. ஜாதி ஆணவக் கொலைகள் நட்டதுள்ளன.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் வாக்குறுதியில் சொன்னபடி நிறைவேற்றப்படவில்லை. தமிழ்நாட்டில் பிறக்கும் எல்லா குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் தருவதாக முதல்வர் தேர்தல் பிரசாரத்தில் சொன்னார். ஆனால் அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டுமே இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.



# தேனியில் தொழில்4.0 தரத்தில் சிறப்பு திறன்மிகு மையக் கட்டடங்களை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

தேனி, ஆக.6-

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப்விஜய் சென்னை தலைமைச் செயலகத் திலிருந்து தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபுரம் திட்டப்பகுதியில் ரூ.39.14 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள 336 (G+2) அடுக்குமாடி குடியிருப்புகள், தேனி வட்டம் கோட்டூர் அரசினர் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் ஆண்டிபட்டி வட்டம், தேக்கம்பட்டி அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் தலா ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தொழில்4.0 தரத்தில் சிறப்பு திறன்மிகு மையக் கட்டடங்களைக் காணொளிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, உத்தமபாளையம் வட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா .வைத்திநாதன்,மற்றும் கம்பம் சட்டமன்ற உறுப்பி னர்.பி.எ ல்.ஏ.ஜெகநாத்மிஸ்ரா கலந்து கொண்டு, அடுக்குமாடிக் குடியிருப்புகளை நேரில் பார்வையிட்டு, குத்துவிளக்கேற்றி வைத்து பயனாளிகளுக்கு குடியிருப்புஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் செயற்பொறியாளர் (தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்) கதிரேசன், வருவாய் கோட்டாட்சியர் (உத்தமபாளையம்) சையது முகைதீன் இப்ராஹிம், மண்டல மேலாளர் (IOB).சந்திரகுமார், உதவி செயற்பொறியாளர். வளர்மதி, வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம் உதவிப்பொறியாளர் ஆனந்தகுமார் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டத்தில் ரூ.90.91கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 4 எண்ணிக்கையிலான புதிய திட்ட பணிகள் : நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்

நீலகிரி, ஆக.6-

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் காட்சி சென்னை தலைமைச்செயலகத் திலிருந்து, காணொலி வா யிலாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், கோத்தகிரி நகராட்சியில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் முடிவுற்ற குடிநீர் அபிவிருத்தி பணிகளையும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் நடுஹட்டி பகுதியில் ரூ.22.16 கோடி மதிப்பீட்டில் 164 எண்ணிக்கையில் புதிதாக கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள், சேரங்கோடு பகுதியில் ரூ.18.92 கோடி



மதிப்பீட்டில் 152 எண்ணிக்கையில் புதிதாக கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளையும் மற்றும் உதகமண்டலம் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் ரூ.7.14 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட சிறப்பு திறன் மையத்திற்கான முன்புனையப்பட்ட பனிமனையும் என ரூ.90.91 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 4 எண்ணிக்கையிலான புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்ததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் நடுஹட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பினை நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், கோத்தகிரி நகர்மன்ற தலைவர் ஜெயக்குமாரி, கோத்தகிரி நகராட்சி ஆணையாளர் ஜெயகுருநாதன், நகராட்சி பொறியாளர் சரவணன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நிர்வாக பொறியாளர் சுதாகரன், உதவி செயற்

பொறியாளர் பாலாஜி, கோத்தகிரி வட்டாட்சியர் மகேந்திரகுமார், அரசு அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# குன்னூர் சிம்ஸ் பூங்காவில் இரண்டாம் கட்ட மலர் செடிகள் நடவு செய்யப்பட்டது

நீலகிரி, ஆக.6-

குன்னூர் சிம்பூங்காவில் இரண்டாம் கட்ட பருவத்தையொட்டி மலர்செடிகள் நடவு செய்யும் பணி மணியளவில் சிம்பூங்கா அலுவலர்களால் துவக்கி வைக்கப்பட உள்ளது. முதற்கட்டமாக பால்சம் செடிகள் சிம்பூங்காவில் நடவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு இரண்டாம் பருவத்திற்கு இரண்டு இலட்சத்து ஐம்பதா யிரம் மலர் நாற்றுக்கள் பூங்காவின் பல்வேறு பகுதிகளில் நடவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் 75 க்கும் மேற்பட்ட மலர் செடி ரகங்கள் நெதர்லாந்து, பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி, போன்ற நாடுகளை தாயகமாக கொண்ட டேலியா, அலிசம், ஹெலிகிரைசம், ப்ரென்ச் மேரிகோல்டு, செலோசியா, கொச்சியா, வெர்பினா, சின்னேரியா, சால்வியா, பிளாக்ஸ், ஜின்னியா, பெகோனியா, பேன்சி, டெல்பினியும், பெட்டுனியா, ஸ்டாக்ஸ், கேலன்டுலா, ஸ்வீட் வில்லியம், சைக்ளமேன், லிஸியான்தஸ் மற்றும் பிரிமுளா போன்ற மலர் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுஇதில் சிம்ஸ்பூங்கா தோட்டக்கலை துறை அலுவலர் நித்யா உதவி தோட்டக்கலை அலுவலர் குருநாதன் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஆக.6-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.ஷி.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# குமாடி குடியிருப்புகள் கட்ட ரூ.1,253 கோடி நிதிவீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறைக்கு ரூ.8,852 கோடி ஒதுக்கீடு

## 14,194 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட ரூ.1,253 கோடி நிதி

சென்னை, ஆக.6-

இந்த நிதியாண்டில் 14,194 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணிகளுக்கு ரூ.1,253 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.Long Distance Bus & Railதமிழக சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கை:தமிழக அரசு அடிப்படை மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளுடன் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல், பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் முறையின் கீழ் தனி வீடுகள் கட்டுதல், வாழ்வாரா மற்றும் மேம்பாடடுத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்திட்ட பணிகளின் கீழ் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ள 24,131 அடுககுமாடி குடியிருப்புகளை கட்டும் பணிகள் இவ்வாண்டில் முடிவடைவதுடன், 14,194 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணிகள் இவ்வாண்டில் தொடங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.1,253



கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுகிறது. சென்னை பெருநகர பகுதியின் எதிர்க்கால வளர்ச்சியை வழிநடத்தும் விதமாக, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் 1,189 சதுர கி.மீ பரப்பினை உள்ளடக்கிய மூன்றாம் முழுமை திட்டத்தை தயாரித்து வருகிறது. சென்னை பெருநகர பகுதியின் விரைவான விரிவாக்கத்தை கருத்தில் கொண்டும், ஒருங்கிணைந்த திட்டமிடலின் தேவையை உணர்ந்தும் 5,904 சதர கி.மீ. பரப்பளவில் விரிவுப்படுத்தப்பட சென்னை பெருநகர பகுதிக்கான ஓர் விரிவான முழுமை திட்டத்தை அரசு தயாரிக்கும். இந்த திட்டம் நடைமுறைப்படுத்த அரசு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்கிறது.Geographic Referenceசென்னை பெருநகர பகுதியில் 'மாநகர இளைஞர் மற்றும் குடும்ப வீட்டு வசதி திட்டம்' என்ற முன்னோடி திட்டத்தை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடுத்த 7 ஆண்டுகளில் 1 லட்சம் வீடுகள் கட்டப்படும். அதன்படி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறைக்கு ரூ.8,852 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தாம்பரம் அருகே ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெற்ற 28ம் ஆண்டு ஆடி திருவிழாவில் 200க்கம் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

செங்கல்பட்டு, ஆக.6-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த கஸ்பாபுரம் பாரதிதாசன் நகரில் உள்ள அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் 28ம் ஆண்டு ஆடி திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது,ஆடி மாதம் 15 நதாம் தேதி முத்துமாரி அம்மனுக்கு சிறப்பு அபிசேகம் செய்யபட்டு ,கங்கை திரட்டி காப்பு கட்டுதலடுன் தொடஙகிய திருவிழா நேற்று சிறப்பு பூஜை ,கூழ் வார்த்தலுடன் இரவு தேர் திருவீதி உலா



நடைபெற்றது,திருவீதி உலாவில் மேளதாளத்துடன் வண்ண மலர்களால் அலஙகரிக்கபட்ட தேரில் முத்துமாரியம்மன் பொதுமக்களால் வடம் பிடித்து முக்கிய வீதிகளில் கொண்டு வரப்பட்டது,அப்போது பக்தர்கள் சிறப்பு பூஜை செய்யபட்டு அம்மன் அருளை பெற்றனர்,இதில் அப்பகுதியை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பம்மலில் மாண்புமிகு தமிழக எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து பம்மல் வடக்கு பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் பகுதி கழக செயலாளர்கள் வே. கருணாநிதி, த.ஜெயக்குமார், தாம்பரம் மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகர துணை செயலாளர் இரா.நரேஷ்கண்ணா உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 700 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்



# பழனி கோவில் நில முறைகேடு: நிலை அறிக்கையை தாக்கல் செய்தது சிபிசிஐடி

மதுரை, ஆக.6-

பழனி தண்டபாணி மடத்துக்கு சொந்தமான ரூ .100 கோடி நிலத்தை முறைகேடாக பத்திரப்பதிவு செய்த வழக்கின் நிலை அறிக்கையை சிபிசிஜடி தாக்கல் செய்தது . பழனி கோயில் நில மோசடி வழக்கு விசாரணையை சிபிஜக்கு மாற்றக் கோரி ஐகோர்ட் கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், வழக்கின் நிலை அறிக்கையை சீலிடப்பட்ட கவரில் வைத்து தாக்கல் செய்தது சிபிசிஜடி. வழக்கை சிபிசிஜடி விசாரிக்கலாமா? அல்லது சிபிஜ விசாரிக்கலாமா? என்பது பற்றி விரிவான விசாரணை நடத்தப்படும்.

# பழனி ரவி மங்கலம் குளத்தில் உள்ளூர் மீனவர்களுக்கு அனுமதி வழங்க கோரிக்கை

பழனி, ஆக.6-

அரசு விதிமுறைகளை பின்பற்றாமல் வெளியூர் நபர்களுக்கு மீன்பிடி உரிமம் வழங்கியதாக அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு ரூ வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக உள்ளூர் மீனவர்கள் வேதனைபழனி அடுத்த காவலப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ரவி மங்கலம் குளத்தில் மீன்பிடிப்பதற்கான உரிமத்தை உள்ளூர் மீனவர்களுக்கு வழங்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.ரவி மங்கலம் குளத்திற்கு அருகே உள்ள முள்ளிச்செட்டு பகுதியில் 50க்கும் மேற்பட்டோர் மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து, நீண்ட காலமாக மீன்பிடித் தொழிலை



செய்து வருகின்றனர். இவர்களின் முக்கிய வாழ்வாதாரமாக மீன்பிடித் தொழில் இருந்து வருகிறது.இந்நிலையில், ரவி மங்கலம் குளத்தில் மீன்பிடிப்பதற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அரசு நிர்ணயித்துள்ள நடைமுறைகளை அதிகாரிகள் முறையாக பின்பற்றவில்லை என உள்ளூர் மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அரசு உத்தரவின்படி குளங்களை மீன்பிடிக்க தனியாருக்கு உரிமம் வழங்கும்போது, அந்தப் பகுதியைச் சேர்ந்த உள்ளூர் மீனவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என விதிமுறை உள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், இந்த விதிமுறையை மீறி வெளியூர் நபர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

ரவி மங்கலம் குளத்தில் மீன்பிடிக்க அனுமதி வழங்க வேண்டும் என உள்ளூர் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அதிகாரிகளிடம் மனு அளித்ததாகவும், அந்த மனுவை நிராகரித்துவிட்டு வெளியூர் நபர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.வெளியூர் நபர்கள் குளத்தில் மீன்பிடிப்பதால், பல ஆண்டுகளாக மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்ந்து வரும் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.எனவே, அரசு விதிமுறைகளை மீறி வழங்கப்பட்டுள்ள மீன்பிடி உரிமத்தை உடனடியாக ரத்து செய்து, ரவி மங்கலம் குளத்தில் உள்ளூர் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மீன்பிடிக்க அனுமதி வழங்க வேண்டும் என அவர்கள் அரசுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஆக.6-
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 86ம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழாவை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக மாணவரணி துணை அமைப்பாளரும் ஜோதிநகர் கிளை செயலாளருமான சே.முத்துக்குமார் குடும்பத்தினர்கள் ஏற்பாட்டில் சுற்றுவட்டார பக்தர்களள் மற்றும் கிராமபொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக மாணவரணி துணை அமைப்பாளரும் ஜோதிநகர் கிளை செயலாளருமான சே.முத்துக்குமார் மற்றும் குடும்பத்தினர் கலந்துகொண்டு ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் முன்னிலையில் சுமார் 2000க்கும் மேற்பட்ட சுற்றுவட்டார பக்தர்கள் மற்றும் கிராமபொதுமக்களுக்கு அறுசுவை அன்னதான நிகழ்ச்சினை துவக்கிவைத்தனர்.




# உலக நுகர்வோர் உரிமைகள் தின விழா

திருப்பத்தூர், ஆக.6-
திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில், நடைபெற்ற உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழாவில், உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தினை முன்னிட்டு பள்ளி, கல்லூரிகளில் நடைபெற்ற கவிதை, கட்டுரை மற்றும் ஓவியப்போட்டிகளில் மாவட்ட அளவிலான முதல் மூன்று இடங்களில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., இன்று (05.08.2026) வழங்கி, நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், முதுநிலை மண்டல மேலாளர் ஜெயம், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சீனிவாசன், துணைப்பதிவாளர் (பொ.வி.தி) ஆ.இளங்கோவன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. நா.கலு சிவலிங்கம், தீயணைப்புத் துறை நிலைய அலுவலர் முருகன், உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் பிரபாகரன், தொழிலாளர் துறை துணை ஆய்வாளர் ஏகாம்பரம், மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு உறுப்பினர் விஜயராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

# தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

கம்பம், ஆக.6-
தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகராட்சிக்குட்பட்ட டி.டி.குளம் தெருவில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே நேரில் சென்று அரிசி, பருப்பு, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு .இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் கம்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஆய்வு மேற்கொண்டு, விவசாயக்கடன், நகைக்கடன், கால்நடை பராமரிப்புக்கடன், தற்பொழுது வரை வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் விவரங்கள், நிரந்தர வைப்புத்தொகை விவரங்கள் மற்றும் பொதுமக்கள் வங்கியில் வைக்கும் நகைகளின் எடைக்கு ஏற்றவாறு கடன் வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்தார். தொடர்ந்து,கம்பம் வடக்கு காவல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு, அங்கு பராமரிக்கப்பட்டு வரும் பல்வேறுபதிவேடுகளை ஆய்வு செய்தார். பின்னர் கம்பம் ஊராட்சி ஒன்றியம், உத்தமபாளையம் முதல் சுருளிப்பட்டி நெடுஞ்சாலையில் நாராயணத்தேவன்பட்டி முதல் சுருளிப்பட்டி வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டப் பணியாளர்கள் மூலம் சாலையின் இருப்புறங்களிலும் மரக்கன்றுகள் நடவு செய்து, பராமரிக்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார். மேலும், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்திற்கு நேரில் சென்று, மையத்தில் உள்ள குழந்தைகளின் உடல் ஆரோக்கியம் குறித்து கேட்டறிந்ததுடன், ஒவ்வொரு குழந்தையும் சரியான உடல் எடையுடன் ஆரோக்கியமாக இருந்திடும் வகையில் பராமரிக்க அறிவுரை வழங்கியதுடன், பணியாளர்களிடம் மாதந்தோறும் குழந்தைகளின் எடையை சரிபார்த்து அவர்களுக்கு தேவையான சத்துணவு வழங்க தாய்மார்களுக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், அப்பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வில் இணைப்பதிவாளர் (கூட்டுறவுத்துறை) நர்மதா, வருவாய் கோட்டாட்சியர் (உத்தமபாளையம்) சையது முகைதீன் இப்ராஹிம், வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம், பணிமேற்பார்வையாளர் பிரதாப் சந்திரன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# ரூ.22.75 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள3 முன் கட்டமைப்பு பணிமனை கட்டிடங்கள், 5 புதிய ஆய்வகங்கள்காணொளிக் காட்சி வாயிலாக முதல்வர் விஜய் திறந்து வைத்தார்

கிருஷ்ணகிரி, ஆக.6-
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.22.75 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 3 முன் கட்டமைப்பு பணிமனை கட்டிடங்கள், 5 புதிய ஆய்வகங்களை காணொளிக் காட்சி வாயிலாக முதல்வர் விஜய் திறந்து வைத்தார். தமிழக முதல்வர் விஜய், நேற்று சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர், ஊத்தங்கரை மற்றும் கெலமங்கலம் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பொதுப்பணித்துறை சார்பாக ரூ.22 கோடிய 75 லட்சத்து 26 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள் 3 முன் கட்டமைப்பு பணிமனை கட்டிடங்கள் மற்றும் 5 புதிய ஆய்வகங்களை திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து பர்கூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில், டாடா டெக்னாலஜிஸ் நிறுவனம், சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.6 கோடியே 25 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள முன் கட்டமைப்பு பணிமனையில் மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பர்கூர் கோவிந்தராசன், கிருஷ்ணகிரி முகுந்தன் ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி வைத்து பணிமனையினை பார்வையிட்டார்.இது குறித்து அவர் கூறுகையில், தமிழக முதல்வர் சென்னை தலைமை செயலாகத்தில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக பொதுப்பணித்துறை சார்பாக பர்கூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் டாடா டெக்னாலஜிஸ் நிறுவனம், சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.6 கோடியே 25 லட்சம் மதிப்பில் 1428.98 ச.மீ பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள முன் கட்டமைப்பு பணிமனை கட்டடத்தையும், ரூ.2 கோடியே 33 லட்சத்து 13 ஆயிரம் மதிப்பில் 854.68 ச.மீ பரப்பளவில் புதியதாக கட்டப்பட்டுள்ள 3 ஆயவக கட்டிடங்களையும், பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் ரூ.1 கோடியே 67 லட்சத்து 13 ஆயிரம் மதிப்பில் 619.25 ச.மீ பரப்பளவில் புதியதாக கட்டப்பட்டுள்ள 2 ஆயவக கட்டிடத்தையும், ஊத்தங்கரை அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில், டாடா டெக்னாலஜிஸ் நிறுவனம், சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.6 கோடியே 25 லட்சம் மதிப்பில் 1428.98 ச.மீ பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு திறன் மையத்திற்கான முன் தயாரிக்கப்பட்ட பணிமனை கட்டடத்தையும், கெலமங்கலம் அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில், டாடா டெக்னாலஜிஸ் நிறுவனம், சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.6 கோடியே 25 லட்சம் மிப்பில் 1428.98 ச.மீ பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள முன் கட்டமைப்பு பணிமனை கட்டடம் என மொத்தம் ரூ.22 கோடியே 75 லட்சத்து 26 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 3 முன் கட்டமைப்பு பணிமனைகள் மற்றும் 5 புதிய ஆய்வகங்களை திறந்து வைத்துள்ளார்.இந்த முன் கட்டமைப்பு பணிமனைகளில், தரைத்தளத்தி, தரக்கட்டுப்பாட்டு அறை, பொருள் சேர் உற்பத்தி அறை, உற்பத்தி ஆய்வகம் மற்றும் வேலை பகுதி, குழாய் வேலை பகுதி அறை, ரோபோடிக்ஸ், கார் லிப்ட், ஆட்டோ, எம்ஆர்ஓ, பேட்டரி, உற்பத்தி செயல்படுத்துதல் அமைப்பு, சேமிப்பு அறை, மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாணவர், மாணவியர் கழிப்பறைகளும், முதல் தளத்தில் சேவையக அறை, பிடிடி, பிஎல்எம் வகுப்பறை, பிவிஏ, மெஷினிங், ஐஓடி வகுப்பறை, ஏஐ, எம்எல் வகுப்பறை, வீசாட் வகுப்பறை, காணொளி மற்றும் கலந்தாய்வு அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது என்றார்.



இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் சுபிதாபி, பர்கூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் முருகன், துணை முதல்வர் அருள்குமார், விரிவுரையாளர்கள் திருஞானம், பிரான்சிஸ்சேவியர், காயத்ரி, சந்தோஷ், சத்தியமூர்த்தி, தாசில்தார் சக்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.



# தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் வெள்ளி வட்டம்

தேவகோட்டை, ஆக .6-
சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி தமிழ்த் துறையின் சார்பாக வெள்ளிவட்டம் என்னும் இலக்கிய மன்றத் தொடக்க விழா நடைபெற்றது. இவ்விழாவைக் கல்லூரி முதல்வர் முனைவர் கண்ணன் தலைமையேற்றுத்தொடங்கி வைத்தார். அவர்தம் உரையில் மாணவர்கள் தங்களது கல்வியோடு தங்களுக்குள் இருக்கும் பன்முக ஆற்றலை வெளிப்படுத்த இவ்வெள்ளி வட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். இவ்விழாவில் நோக்க உரையாற்றிய தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் கண்ணதாசன் மாணவர்கள் மேடை ஏறி தங்கள் சிந்தனைகளுக்கு வடிவம் கொடுத்து இலக்கிய உலகில் வலம் வர வேண்டும் என்னும் உயரிய நோக்கத்திலேயே இவ்வெள்ளி வட்டம் நடத்தப்படுகின்றது என அதன் நோக்கத்தினை எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சங்கரதாஸ் கல்லூரி வகுப்பறைகளை விட கல்லூரி மேடைகளை மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பேராசிரியர்களுக்குள்ளும் ஒரு பேச்சாளர், கவிஞர், சிறுகதை ஆசிரியர், விமர்சகர் எனப் பல்வேறு திறமைகள் உண்டு அதனை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஆசிரியர்களை அணுகி தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தி பயன்பெற்றுக்கொள்ள வேண்டும் எனப் பேசினார். இவ்விழாவில் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் வெள்ளி வட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் இளங்கோ வரவேற்றார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் வெள்ளி வட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தவமணி நன்றி கூறினார். இவ்விழாவில் கல்லூரியில் பயிலும் இளங்கலை முதலாம் ஆண்டு மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.





■ திருப்பத்தூர் மாவட்டம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், புத்தாகரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், 15ஆவது மத்திய நிதிக் குழு மானியத் திட்டத்தின் கீழ் (கிராம ஊராட்சி) ரூ.5.85 இலட்சம் மதிப்பீட்டில், சமுதாய சுகாதார வளாக கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (04.08.2026)அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி, உதவி செயற்பொறியாளர் மஞ்சுநாதன், சோலையார்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெ.மணவாளன், உ.பாலமுருகன், உதவி பொறியாளர் செல்வி. ரஷாதபசும் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



# வாணியம்பாடி அருகே அனுமதியின்றி மண் கடத்தல்: 9 டிராக்டர்கள், 2 ஜேசிபி இயந்திரங்கள் பறிமுதல்

திருப்பத்தூர், ஆக.6-
வாணியம்பாடி அருகே உள்ள சின்ன வேப்பம்பட்டு ஏரியில் அனுமதியின்றி மண் கடத்தியதாக, 9 டிராக்டர்கள் மற்றும் 2 ஜேசிபி இயந்திரங்களை வட்டாட்சியர் சுதாகர் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தார்.



# சேம்பார் நடுநிலைப் பள்ளியில் மகிழ் முற்றம் நிகழ்ச்சி: குறிஞ்சி அணி முதலிடம்

காளையார்கோவில், ஆக.6-
சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியத்திற்குட்பட்ட சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களின் கற்றல் திறன், தலைமைத்துவம் மற்றும் குழு ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் 'மகிழ் முற்றம்' நிகழ்ச்சி பள்ளித் தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பள்ளியில் ஒவ்வொரு மாதமும் மாணவர்களின் வருகைப்பதிவு, கற்றல் திறன், கலைத் திருவிழா, விளையாட்டு, வானவில் மன்றம், மன்றச் செயல்பாடுகள் மற்றும் ஆண்டு விழா போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளின் அடிப்படையில் அணிகளுக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, சிறந்த அணிக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, கடந்த ஜூலை மாதத்திற்கான மதிப்பீட்டில் குறிஞ்சி அணி அதிக மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தைப் பிடித்தது. பாலை மற்றும் நெய்தல் அணிகள் இரண்டாம் இடத்தையும், மருதம் மற்றும் முல்லை அணிகள் முறையே மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களையும் பெற்றன.

முதலிடம் பெற்ற குறிஞ்சி அணிக்கு சுழற்கோப்பை மற்றும் ஊக்கப் பரிசுகளை தலைமை ஆசிரியர் சுரேஷ் வழங்கினார். அணியின் தலைவர் லிடிஸ்டினா, துணைத் தலைவர் யுவன்சிகா மற்றும் பொறுப்பாசிரியர்கள் பாரதி மலர், தனபாக்கியம் ஆகியோர் சுழற்கோப்பையை பெற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய தலைமை ஆசிரியர் சுரேஷ், மாணவர்களின் கற்றல் திறன், தலைமைத்துவ பண்பு, சம வாய்ப்பு மற்றும் ஆசிரியர்ஸ்ரீமாணவர் உறவை வலுப்படுத்துவதே மகிழ் முற்றம் நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் எனத் தெரிவித்தார்.

முடிவில் பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் முத்துக்குமார், முருகன், சகாயசெல்வி, பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், சத்துணவு மற்றும் காலைச் சிற்றுண்டி திட்டப் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# பணி நீக்க ஆணையை ரத்து செய்ய வலியுறுத்தி கூட்டுறவுத்துறை ஊழியர்கள் போராட்டம்!

## மதுரையில் மாவட்ட இணைப் பதிவாளர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

மதுரை, ஆக.6-

ராமநாதபுரம் மண்டல கூட்டுறவு சார்பதிவாளர் வேல்முருகன் மீதான பணி நீக்க ஆணையை ரத்து செய்ய வலியுறுத்தியும், பதிவாளரின் ஊழியர் விரோத போக்குகள் மற்றும் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) தன்னிச்சையான நடவடிக்கையை கண்டித்தும், கூட்டுறவுத்துறை அமைச்சரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம் சார்பில் மதுரை பழங்காநத்தம் மாவட்ட இணைப் பதிவாளர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத் தலைவர் தாமோதர ராவ் தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் தமிழ், மாவட்டப் பொருளாளர் பரமசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநில நிர்வாகி ஆசிக் ரசூல் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினார்.மேலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தெற்கு வட்டக் கிளைத் தலைவர் பஞ் சவர்ணம், கிளைச் செயலாளர் பிரேமலதா, மேற்கு வட்டக் கிளைச் செயலாளர் ராஜா, தெற்கு வட்ட துணைத் தலைவர் மகுடீஸ்வரன், கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநில செயற்குழு உறுப்பினர் அழகர்சாமி உள்ளிட்ட ஏராளமான கூட்டுறவுத்துறை ஊழியர்கள் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில், வேல்முருகன் மீதான பணி நீக்க ஆணையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும், அனைத்து பணிகளுக்கும் புதிய அவகாசம் வழங்கி பணியாற்ற உத்தரவிட வேண்டும், கண்காணிக்க தவறினார் என்ற காரணத்தால் இனி நடவடிக்கை எடுக்கக் கூடாது, அனைத்து நிலைகளிலும் பதவி உயர்வு வழங்க அரசாணை பிறப்பிக்க வேண்டும், ஓராண்டாகியும் பணி ஆணை வழங்கப்படாத மூன்று துணைப் பதிவாளர்களுக்கு உடனடியாக பணியமர்வு ஆணை வழங்க வேண்டும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அனைத்து பொதுப்பணியிட மாறுதல்களையும் அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஊழியர்கள் கண்டன கோஷங்களை எழுப்பினர்.இறுதியில், மாவட்டப் பொருளாளர் குறிஞ்சி இளவரசன் நன்றியுரை கூறினார்.




# மானாமதுரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 'கைசன் கிளப்' துவக்க விழா

மானாமதுரை, ஆக.6-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், வணிகவியல் துறையின் சார்பில் மாணவர்களின் திறன் மேம்பாடு, தொழில்முனைவு சிந்தனை மற்றும் தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் நோக்கில் 'கைசன் கிளப்' துவக்க விழா நடைபெற்றது.கல்லூரி முதல்வர் டாக்டர் கோவிந்தன் தலைமை வகித்தார். வணிகவியல் துறைத் தலைவர் டாக்டர் செண்பகநாதன் வரவேற்புரையாற்றி, கைசன் கிளப்பின் நோக்கம் மற்றும் எதிர்கால செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.தொடர்ந்து, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதுநிலை வணிகவியல் துறைத் தலைவர் டாக்டர் கணேசன், கைசன் கிளப்பை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். மாணவர்கள் தொடர்ச்சியான கற்றல், புதுமைச் சிந்தனை மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கார்ப்பரேட் நிறுவன மனிதவள மேலாளர் சுபாஷ் கார்த்திக், தொழில்துறையின் தற்போதைய தேவைகள், வேலைவாய்ப்பிற்கான தயாரிப்பு, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு பயனுள்ள ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



■ மதுரை மாவட்டம், சொக்கிகுளத்தில் ரூபாய் 4.06 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மதுரை வடக்கு வட்டாட்சியர் அலுவலக கட்டடப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா பார்வையிட்டார்.

# செக்கானூரணி பேருந்து நிலையத்திற்கு பி.கே. மூக்கையா தேவர் பெயர் வைக்க கோரிக்கை

## 15 ஆயிரம் குடும்பங்கள் சார்பில் ஆட்சியரிடம் மனு; பி.வி. கதிரவன் தலைமையில் வலியுறுத்தல்



மதுரை, ஆக.6-

மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா ஆ.கொக்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட செக்கானூரணியில் புதிதாக கட்டப்பட்டு வரும் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையத்திற்கு, மறைந்த முன்னாள் எம்.எல்.ஏ. மற்றும் எம்.பி.யான பி.கே. மூக்கையா தேவர் பெயரைச் சூட்ட வேண்டும் என்று வலியுறுத்தி, முன்னாள் எம்.எல்.ஏ. பி.வி. கதிரவன் தலைமையில் கவிக்குமார், ஆனந்தன் பார்வர்டு பிளாக் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.செக்கானூரணி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று மதுரை–தேனி தேசிய நெடுஞ்சாலையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த பேருந்து நிலையத்திற்கு கல்விப் பணிக்காக வாழ்நாளை அர்ப்பணித்த பி.கே. மூக்கையா தேவர் பெயரைச் சூட்ட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.பி.கே. மூக்கையா தேவர், கள்ளர் கல்விக் கழகத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியதுடன், ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டதால், அவரை மக்கள் "கல்வித் தந்தை" என்று போற்றுகின்றனர்.

இந்தக் கோரிக்கையை முன்னிறுத்தி, ஆ.கொக்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட தேங்கல்பட்டி, பாறைப்பட்டி, சிக்கம்பட்டி, அய்யம்பட்டி, ஒத்தப்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் குடும்பங்களின் ஆதரவுடன் முன்னாள் எம்.எல்.ஏ. பி.வி. கதிரவன் தலைமையில் மனு அளிக்கப்பட்டது.மேலும், கடந்த ஜனவரி 26ஆம் தேதி செக்கானூரணி அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், புதிய பேருந்து நிலையத்திற்கு பி.கே. மூக்கையா தேவர் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில், ஆ.கொக்குளம் கிராமக் கமிட்டித் தலைவர் பழனி மற்றும் பொதுமக்கள் இணைந்து மாவட்ட ஆட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் ஆகியோரிடமும் மனு அளித்து, அரசிடம் உரிய பரிந்துரை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளனர். செக்கானூரணி புதிய பேருந்து நிலையத்திற்கு பி.கே. மூக்கையா தேவர் பெயரை அரசு சூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் ஒருமித்த கோரிக்கையாக உள்ளது.



■ தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெறவுள்ள போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சியை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர்நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# மதுரை ஆவினில் கால்நடை மருத்துவர்களுக்கு வேலைவாய்ப்பு - ஆகஸ்ட் 20ல் நேர்முகத் தேர்வு!

மதுரை, ஆக.6-

மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (ஆவின்) மூலம் நாள்தோறும் சராசரியாக 1.40 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், கிராமப்புற விவசாயிகளின் கறவை மாடுகளுக்கு மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்கும் கால்நடை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.இந்நிலையில், மதுரை ஆவினில் 2 கால்நடை மருத்துவ ஆலோசகர் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன.




இதற்கான நேர்முகத் தேர்வு ஆகஸ்ட் 20ஆம் தேதி (வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு மதுரை–சிவகங்கை மெயின் ரோடு, சாத்தமங்கலத்தில் அமைந்துள்ள மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறுகிறது.தகுதியும் விருப்பமும் உள்ள கால்நடை மருத்துவ பட்டதாரிகள், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் கால்நடை மருத்துவ கவுன்சில் பதிவு சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வில் பங்கேற்கலாம்.மேலும் விவரங்களுக்கு 94437 08209 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது aavinmadurai1@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.



# உடல் தானம் வழங்கி மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டு - மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கல்வி ஆராய்ச்சிக்காக முதியவரின் உடல் தானம்

சிவகங்கை, ஆக.6-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி கலனிவசலைச் சேர்ந்த கா. ஜெகநாதன் (75) தனது வாழ்நாளிலேயே தெரிவித்திருந்த விருப்பத்தின்படி, அவரது உடல் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக இன்று (05.08.2026) அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரிக்கு உடல் தானமாக வழங்கப்பட்டது.மறைந்த ஜெகநாதனின் மகள், அவரது விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் உடலை மருத்துவக் கல்லூரியிடம் ஒப்படைத்தார். இந்த உடல் தானம், முதலாம் ஆண்டு மருத்துவ மாணவர்களின் உடற்கூறியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு பயனுள்ளதாக அமையும்.

இந்த மனிதநேயமிக்க செயலைப் பாராட்டி, அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) ஜெகநாதனின் குடும்பத்தினருக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.இந்நிகழ்வில் துணை முதல்வர், நிலைய மருத்துவ அலுவலர்கள், பேராசிரியர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி பணியாளர்கள் கலந்து கொண்டனர்

# கறவை மாடுகள் வழங்கும் திட்டம்: ரூ. 57 கோடி ஒதுக்கீடு

சென்னை, ஆக.6-

தகுதிவாய்ந்த பெண்களுக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திற்கு ரூ. 57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 10,000 தகுதி வாய்ந்த பெண்களுக்கு கறவை மாடுகள் விலையில்லாமல் வழங்கப்படும். இதற்காக, திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ. 57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருத்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கு ரூ. 4,880 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

# கரூரில் வளர்ப்பு நாய்க்கு வளைகாப்பு: குடும்பத்தினர் நெகிழ்ச்சி

கரூர், ஆக.6-

கரூர் மாவட்டம் சோமூரை சேர்ந்தவர் கோமதி. இவர் தனது வீட்டில் 'சாரா' என்ற சிட்சு வகை நாய் வளர்த்து வருகிறார். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சாராவை தங்களது குடும்பத்தின் ஒரு உறுப்பினராக கருதி பாசத்துடன் வளர்த்து வருகின்றனர். இந்நிலையில் சினையாக உள்ள சாரா வரும் 15 முதல் 20ம் தேதிக்குள் குட்டிபோடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் கோமதி மற்றும் அவரது குடும்பத்தினர், பெண்களுக்கு நடத்தப்படும் வளைகாப்பு சடங்கை போன்று, செல்ல நாய் சாராவிற்கும் நேற்று வளைகாப்பு நடத்தினர்.



தட்டுகளில் சாராவிற்கு பிடித்த மிக்சர், பிஸ்கட், பழங்கள், பூக்கள் மற்றும் நாய்களுக்கென பிரத்யேகமாக தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் சீர்வரிசையாக கொண்டு வந்து வைத்தனர். பின்னர் சாராவுக்கு வளையல் அணிவிக்கப்பட்டது. இதில் கோமதியின் உறவினர்கள் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் விருந்து வழங்கப்பட்டது.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161